காலை முரசு

பக்கங்கள் 22

## ஆண் குழந்தை ஒன்று வயலில் இருந்து மீட்பு!

**பெற்றோரைத் தேடி வலைவீச்சு**



குருநாகல், மாவத்த கம, பரகஹதெனிய, சிங் கபுர பிரதேசத்தில் உள்ள வயலில் இருந்து பிறந்து இரண்டு நாள்களே 04

முழக்கம்: 02 வள்ளுவ ஆண்டு 2055 ஆடி 02 வெள்ளிகிழமை 18.07.2025 அதிர்வு 348



### நாட்டின் விடிவுக்கான பயணத்தில்

# முன்வைத்த காலை பின்வைக்க மாட்டேன்

## மகாநாயக்க தேரர்கள் முன்னிலையில் ஜனாதிபதி அநுர நேற்று தெரிவிப்பு

இந்த நாட்டின் விடிவுக்கான பயணத்தில் முன்வைத்த காலை ஒருபோதும் பின் வைக்க மாட்டேன் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அரசாங்க விவகாரங்களில் மகா சங் கத்தினரின் தொடர்ச்சியான வழிகாட்டல் களை எதிர்பார்ப்பதாகவும், தேசிய, மத மற்றும் சமூக மேம்பாட்டுக்கான நடவடிக் கைகளை பின்வாங்காமல் செயற்படுத்து வதாகவும் அவர் குறிப்பிட்டார். 04

### 323 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்ட விவகாரம்:



# அமைச்சர் பிமல் ரத்நாயக்கவை உடன் கைது செய்து விசாரிக்குக!

**தயாசிறி எம்.பி. வலியுறுத்து**

"கொள்கலன்கள் விடுவிப்பு தொடர்பில் துறைமுக அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க மற்றும் சுங்கத் திணைக்களத் தின் பதில் ஆணையாளர் நாயகம் சீவலி அருட்கொட ஆகியோரைக் கைது செய்து முறையான விசாரணைகளை 04




யாழ்ப்பாணம் மாநகர சபை யின் நேற்று முன்தினம் நடை பெற்ற அமர்வில் சிரிப்பு, கேலிக் கூத்து , சாப்பாட்டுக் கோரிக்கை, அரசியல் குழப்பம் போன்ற எவற் றிற்குமே பஞ்சம் இருக்க வில்லை.

ஏறக் குறைய நிகழ்ச்சி நிர லில் இருந்த விடயங்களோ, இல்லாத விடங்களோ அனைத் திலும் ஏதோ ஒரு கட்சி முரண்டு பிடித்து அல்லது அரசி யல் சுய நலத்தை பிரதிபலித்து களேபரம் பண்ணத் தவற வில்லை.

ஆனாலும் ஒரே ஒரு விட யத்தில் மட்டும் சபை அமர்வில் பங்குகொண்டிருந்த நாற்பதுக் கும் மேற்பட்ட உறுப்பினர்களும் எதிர்த்து வாய் திறக்கவோ அல்லது மாறான 03



# சர்ச்சைக்குரிய தையிட்டி விகாரைக்கு அருகே மற்றுமொரு சட்ட விரோதக் கட்டடம் அமைப்பு

(ந.லோகதயாளன்)

தையிட்டியில் சர்ச்சைக்குரிய சட்ட விரோத விகாரை வளாகத்தில் மற்றுமோர் கட்டடம் கட்ட ஏற்பாடு இடம்பெறுகின்றது என்றும் இந்த இடத்தை யாழ் மாவட்ட அரச அதிபர் ம.பிரதீபன் மற்றும் அமைச்சர் சந்திரசேகரன் ஆகியோர் பார்வையிட்டனர் என்றும் கூறப்படுகின்றது.

தையிட்டி சட்ட விரோத வளாகத்தில் மற்றுமோர் அத்து மீறிய கட்டடம் அமைக்கப்படுவதாக வலி. வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சோ. சுகிர்தனின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதையடுத்து சக உறுப்பினர்கள் சகிதம் சம்பவ இடத்திற்கு தவிசாளர் நேற்றுச் சென்றிருந்தார்.

பிரதேச சபையின் தவிசாளர் சென்ற சமயம் மாவட்ட அரச அதிபர் ம.பிரதீபன் மற்றும் அமைச்சர் சந்திரசேகரன் ஆகியோர் அப்பகுதியில் நிற்கின்றமை அவதானிக்கப்பட்டதாக வலி.வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சோ. சுகிர்தன் தெரிவித்தார்.

இந்தச் சட்ட விரோத கட்டடம் தனியாரின் காணிக்குள் வருவதனால் அந்த நிலத்தின் உரிமையாளர் ஊடாக நீதிமன்றை நாடவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் யாழ். மாவட்ட அரச அதிபர் ம.பிரதீபனைத் தொடர்புகொண்டு கேட்டபோது –

தையிட்டி விகாரை விடுவிப்புத் தொடர்பில் பௌத்த பிக்குவுடன் கலந்துரையாடுவதற்காகவே தாங்கள் அங்கு சென்றிருந்தனர் என அவர் பதிலளித்தார்.





# தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை வலுவற்றதாக்க முயற்சின்றது அரசு

## தயாசிறி எம்.பி. குற்றச்சாட்டு




இந்த அரசு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை வலுவற்றதாக்குவதற்கு முயற்சிக்கின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர குற்றஞ்சாட்டினார்.

கொழும்பில் உள்ள தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவில் நேற்று முன்னிலையானதன் பின்னர் ஊடகங்களுக்குக்கருத்துத்தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“ஜனாதிபதி நிதியத்தில் இருந்து நிதி பெற்றவர்களின் பெயர் விவரங்களை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ அண்மையில் நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்தினார். 2008 முதல் 2024 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஆட்சியில் இருந்த அரசின் போது ஜனாதிபதி நிதியத்தில் இருந்து நிதி பெற்ற அரசியல்வாதிகளின் பெயர் விவரங்கள் மாத்திரமே வெளிப்படுத்தப்பட்டன.

2004 முதல் 2008 வரையான காலப்பகுதியில் ஆட்சியில் இருந்த அரசின் நிர்வாகத்தின் கீழ் ஜனாதிபதி நிதியத்தில் இருந்து நிதி பெற்றவர்களின் பெயர் விவரங்கள் ஏதும் வெளிப்படுத்தப்படவில்லை. 2004 - 2008 ஆம் ஆண்டு அரசுக்கு மக்கள் விடுதலை முன்னணியின் 39 உறுப்பினர்கள் ஆதரவு வழங்கினார்கள். இவர்களும் ஜனாதிபதி நிதியத்தில் இருந்து நிதி பெற்றுள்ளார்கள். அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ 2004 - 2008 வருட காலத்தின் விவரங்களை நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்தவில்லை. அவ்வாறாயின் இதில் ஏதேனும் முறைகேடு இடம்பெற்றுள்ளது என்ற சந்தேகம் காணப்படுகின்றது.

2004 - 2008 வரையான காலப்பகுதியில் ஜனாதிபதி நிதியத்தில் இருந்து நிதி பெற்றுக்கொண்டவர்களின் விவரங்களைத் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாகப் பெற்றுக்கொள்வதற்குக் கடந்த 5 மாதங்களாக நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளேன். ஆனால், இதுவரையில் எனக்கு அறிக்கை கிடைக்கவில்லை.

சுயாதீன தகவல் அறியும் ஆணைக்குழுவை மரணப் படுக்கைக்குக் கொண்டு செல்லவே அரசு முயற்சிக்கின்றது. தகவல் அறியும் ஆணைக்குழுவின் தலைவர் பதவி கடந்த மார்ச் மாதத்தில் இருந்து வெற்றிடமாகியுள்ளது. அத்துடன் ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபையிலும் உறுப்பினர் பற்றாக்குறை காணப்படுகின்றது.

இந்த அரசு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை வலுவற்றதாக்குவதற்கு முயற்சிக்கின்றது. சுயாதீன தகவல் அறியும் ஆணைக்குழுவின் அதிகாரங்களை மலினப்படுத்தும் வகையிலான செயற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன. அரச நிறுவனங்களில் தகவல் கோரப்படும் பட்சத்தில் அவை மறுக்கப்படுகின்றன.” - என்றார்.

---

### இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருத்தைக் கூறவோ இல்லை. அந்த விடயத்தில் சர்ச்சை எதேனும் இல்லவே இல்லை என்பது போல பெருமாள் மாடு போல தலையாட்டிக் கொண்டார்கள். இணங்கிப் போனார்கள்.

அது என்ன விடயம் தெரியுமா?

சங்கின் உறுப்பினர் தர்ஷானந்த் நிதிக் குழு ஊடாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி சபை அங்கீகாரத்திற்காக அறிக்கையாகச் சமர்ப்பித்திருந்தார். அறிக்கையின் ஏனைய விடயங்கள் சபை அங்கீகாரத்திற்கு எடுக்கப்பட்ட போது அவை அனைத்தும் சர்சையாகவே பார்க்கப்பட்டு, முரண்பாடுகள் கிளம்பின.

இருப்பினும் மாநகர சபை உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவிற்கு மேலதிகமாக, மூன்று வேறு வகையான கொடுப்பனவுகளாக மாதாந்தம் தலா 16 ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் என்ற விடயம் அங்கீகாரத்துக்கு எடுக்கப்பட்ட போது மாத்திரம் மாநகர சபையில் அங்கம் வகிக்கும் எந்தவொரு கட்சியில் இருந்தும் எந்தவொரு உறுப்பினரும் ஆட்சேபிக்கவில்லை. எதிர்க்கவில்லை. ஏன், வாயே திறக்கவில்லை எனலாம்.

தனக்குத் தனக்கு என்றால் சுளகு படக்குப் படக்கு என்று அடிக்குமாம். அது போல தமக்குத் தமக்கான ஒதுக்கீடு என்றதும், எல்லா உறுப்பினர்களும் பம்மிக் கொண்டனர் போலும்

நேர்மை, ஊழல் தவிர்ப்பு, மக்கள் சேவை, வீண் விரயத்துக்கு எதிர்ப்பு, ஊதாரித்தனத்துக்குக் கட்டுப்பாடு எனக் கூவும் தேசிய மக்கள் சக்தியின் பத்து உறுப்பினர்களோ, தேசியத்தின் காவலர்கள் எனக் கூறிக்கொள்ளும் த.தே.ம. முன்னணி உறுப்பினர்களோ சபையில் இருந்தபோதும் அவர்களில் ஒருவர்கூட இது தொடர்பாக வாயைத் திறக்கவே இல்லை.

நல்ல மக்கள் சேவை... போங்கள்...!

***

மாத்தறை பொலிஸ் பிரிவில் பணியாற்றும் மூன்று பொலிஸ் அதிகாரிகள் - சப் இன்ஸ்பெக்டர்மார் - பதவியில் இருந்து இடைநிறுத்தப்பட்டு இருக்கிறார்கள்.

மாத்தறைப் புலனாய்வுப் பிரிவு, திஹா கொட பொலிஸ் நிலையம் மற்றும் மாவரல பொலிஸ் நிலையம் ஆகியவற்றில் பணியாற்றும் மூன்று சப் இன்ஸ்பெக்டர்களே இவ்வாறு பதவியில் இருந்து இடைநிறுத்தப்பட்டிருக்கிறார்கள். ஏன் தெரியுமா? அப்பகுதியில் உள்ள ‘ஸ்பா’ என்று கூறப்படும் மசாஜ் நிலையங்களுக்குச் சென்று தங்களுக்கு இலவசமாக மசாஜ் சேவை செய்ய வேண்டும் என்று அங்கு உள்ளவரோடு அடம்பிடித்து அதிகாரம் செலுத்திய குற்றச்சாட்டுக்காக இந்த நடவடிக்கை. பணம் செலுத்தாமல் மசாஜ் நிலைய சேவை தங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று இவர்கள் அச்சுறுத்தினர் எனக் கூறப்படுகிறது. இது தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை விசாரித்த மாத்தறைப் பிரதி பொலிஸ் அத்தியட்சகர் இந்த மூன்று சப் இன்ஸ்பெக்டர்மாரையும் பதவியில் இருந்து இடைநிறுத்தி இருக்கிறார்.

பொலிஸ் ஒழுக்கத்திற்கு தீங்கு விளைவிக்கும் நடத்தை, தனிப்பட்ட நலனுக்காக தங்கள் அதிகாரப்பூர்வ பதவிகளை தவறாகப் பயன்படுத்தியமை, அவமதிப்புக்குரிய செயற்பாடு மற்றும் ஊழல் நடைமுறைகள் உள்ளிட்ட பல மீறல்கள் தொடர்பில் இந்த அதிகாரிகள் குற்றவாளிகள் என்று மாத்தறை பிரிவின் பிரதி பொலிஸ் அத்தியட்சகர் கூறுகின்றார்.





## முன்வைத்த...

மல்வத்து – அஸ்கிரி உபய மகா விகாரையின் அனுநாயக்க தேரர் உட்பட நிர்வாக சபை நாயக்க தேரர்களுடன் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் கண்டியில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

மல்வத்து – அஸ்கிரி மகாநாயக்க தேரர்களின் அனுசாசனைக்கு அமைவாக மத, தேசிய மற்றும் சமூகம் சார்ந்த விசேட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதே இதன் நோக்கமாகும்.

பௌத்த சாசன விடயங்களில் எழுந்துள்ள பிரச்சினைகளைத் தீர்க்க, பௌத்த விகாரை தேவாலகம் சட்டம், போன்ற பல்வேறு சட்டங்களில் சரியான நேரத்தில் திருத்தங்களைக் கொண்டுவர வேண்டியதன் அவசியம் குறித்தும் மற்றும் பிக்குமார்களுக்கான கல்வி தொடர்பாகவும் மகா சங்கத்தினர் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

தற்போதைய சவால்களை அடையாளம் கண்டு, மத விழுமியங்கள் மற்றும் கலாசாரத்தைப் பாதுகாக்க அரசு முன்வந்து ஒரு வேலைத்திட்டத்தை வகுப்பதன் முக்கியத்துவம் மற்றும் பௌத்த சாசனப் பிரச்சினைகளுக்காகவும் பௌத்த சாசன முன்னேற்றத்துக்காகவும் அரசின் பங்களிப்பைப் பற்றி கலந்துரையாடுவதற்கு புத்தசாசன செயற்பாட்டு ஆலோசனைக் குழுவொன்றை நிறுவுவதன் முக்கியத்துவம் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

பௌத்த சாசன ரீதியாக நிலவும் பல்வேறு சவால்கள் மற்றும் நெருக்கடிகளைத் தீர்ப்பதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகளை உடனடியாகத் தயாரிக்குமாறும் ஜனாதிபதி சம்பந்தப்பட்ட துறைகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

மல்வத்து மகா விகாரைப் பிரிவைப் பிரதிநிதித்துவப்படுத்தி வண.திம்புல்கும்புரே விமலதம்ம அனுநாயக்க தேரர், கலாநிதி வண. பஹமுனே ஸ்ரீ சுமங்கல நாயக்க தேரர், வண. ரம்புக்வெல்லே ஸ்ரீ நந்தாராம நாயக்க தேரர், வண. தொரனேகம ஸ்ரீ ரதனபால நாயக்க தேரர், வண. திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த மேதங்கர நாயக்க தேரர், வண. வெலகெதர ஸ்ரீ சுமணஜோதி நாயக்க தேரர், வண. மஹவெல ஸ்ரீ ரதனபால நாயக்க தேரர், அஸ்கிரி மகா விகாரையைப் பிரதிநிதித்துவப்படுத்தி வண. வெடருவே உபாலி அனுநாயக்க தேரர், வண. ஆனமடுவே ஸ்ரீ தம்மதஸ்ஸி அனு நாயக்க தேரர், கலாநிதி வண. உருளேவத்தே ஸ்ரீ தம்மரக்கித நாயக்க தேரர், வண. கொடகம ஸ்ரீ மங்கள நாயக்க தேரர், கலாநிதி வண. மெதகம தம்மாநந்த தேரர், வண. நாரம்பனாவே ஸ்ரீ ஆனந்த நாயக்க தேரர், வண. முருந்தெனியே ஸ்ரீ தம்மரதன நாயக்க தேரர் வண, கெட்டகும்புரே ஸ்ரீ தம்மாராமய நாயக்க தேரர் மற்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவி, நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற் கொள்ள வேண்டும்.”

– இவ்வாறு வலியுறுத்தினார் ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“பரிசோதனைகளின்றி விடுவிக்கப்பட்ட 323 கொள்கலன்கள் தொடர்பில் ஊடகங்களுக்குக் குறிப்பிட்ட விடயங்களுக்காக நானும், உதய கம்மன்பிலவும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகி வாக்குமூலம் அளித்துள்ளோம்.

இந்தக் கொள்கலன் விடுவிப்பு தொடர்பில் ஆராய்வதற்கு ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழு பல பரிந்துரைகளை முன்வைத்துள்ளது. அந்த அறிக்கையில் சிவப்பு முத்திரை பதிக்கப்பட்ட கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டமை முறையற்ற செயற்பாடு என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாறாயின் துறைமுக அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க மற்றும் சுங்கத் திணைக்களத்தின் பதில் ஆணையாளர் நாயகம் சீவலி அருட்கொட ஆகியோரைக் கைது செய்து முறையான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.

குற்றச் செயலுடன் தொடர்புடையவர்களை விசாரிக்காமல், குற்றத்தை வெளிக்கொண்டு வந்தவர்களை விசாரிப்பது சட்டத்துக்கு முரணானது என்பதைக் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விளங்கிக்கொள்ள வேண்டும்.” – என்றார்.

## ஆண்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யான ஆண் குழந்தை ஒன்று உயிருடன் மீட்கப்பட்டுள்ளது.

குருநாகல், மாவத்தகம, பரகஹதெனிய, சிங்கபுர பிரதேசத்தில் உள்ள வயலில் இருந்தே நேற்று வியாழக்கிழமை பிற்பகல் மேற்படி குழந்தை மீட்கப்பட்டுள்ளது என்று மாவத்தகம பொலிஸார் தெரிவித்துள்ளனர். .

வயல் பகுதியில் குழந்தை ஒன்று இருப்பதாகப் பிரதேசவாசிகள் வழங்கிய தகவலுக்கு அமைய சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் குழந்தையைப் பாதுகாப்பாக மீட்டுள்ளனர்.

மேற்படி குழந்தை மாவத்தகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக குருநாகல் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளது.

குழந்தையின் பெற்றோர் குழந்தையை வயலில் கைவிட்டுச் சென்றிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் மாவத்தகம பொலிஸார், குழந்தையின் பெற்றோரையும் தேடி வருகின்றனர்.

# யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் தம்மை மாகாண சபைக்கு விடுவிக்க விண்ணப்பம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர் சாம்பசிவம் சுதர்சன் தன்னை மாகாண சபைக்கு விடுவிக்குமாறு மாவட்ட அரச அதிபரிடம் எழுத்தில் விண்ணப்பித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட நிர்வாகத்தில் மேலதிக அரச அதிபர் பதவிகள் மற்றும் பிரதேச செயலாளர் நியமனங்களில் கடும் பனிப்போர் நிலவுவதாகக் கூறப்படும் நிலையில் ஒரு பிரதேச செயலாளர் விரைவில் தன்னை மாகாண சபைக்கு விடுவிக்குமாறு விண்ணப்பிக்கவுள்ளார் எனச் செய்திகள் வெளிவந்தன.

இவ்வாறு செய்திகள் வெளிவந்த சில நாள்களில் யாழ்ப்பாணம் மாவட்டத்தின் யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் சாம்பசிவம் சுதர்சன் மாவட்ட அரச அதிபர் ஊடாக விண்ணப்பித்துள்ளார் என அறிய வந்தது.

பிரதேச செயலாளர் விடுவிப்புக்கோரி விண்ணப்பித்துள்ளமை தொடர்பில் மாவட்ட அரச அதிபரிடம் தொடர்புகொண்டு கேட்டபோது விண்ணப்பக் கடிதம் கிடைத்ததை அவர் உறுதி செய்தார்.





# துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான 13 யானைகள் தொடர்ந்தும் சிகிச்சை

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான 13 யானைகள் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றன என வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

அண்மையில், துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நிலையில் சிகிச்சை பெற்று வந்த 'பாத்திய' என்றழைக்கப்படும் யானை உயிரிழந்ததை அடுத்து, வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் வனவிலங்கு சுகாதார பணிப்பாளர் தாரக பிரசாத் இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

இதற்கமைய, அனுராதபுரத்தில் 7 யானைகளும், பொலன்னறுவையில் 3 யானைகளும், வவுனியாவில் ஒரு யானையும், தெற்கில் 2 யானைகளும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நிலையில், சிகிச்சைபெற்று வருகின்றன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, இலங்கையில் 20 சதவீதமான யானைகளின் உயிரிழப்புகள், துப்பாக்கிச் சூடுகள் காரணமாகவே நேர்ந்துள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஜனாதிபதி நிதியத்தை தொடர்பு கொள்ள புதிய தொலைபேசி இலக்கம் அறிமுகம்



ஜனாதிபதி நிதியத்தை தொடர்பு கொள்ள புதிய தொலைபேசி எண் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களம் இதனைத் தெரிவித்துள்ளது.

இதன்படி பொதுமக்கள் இப்போது ஜனாதிபதி நிதியத்தை 011-4354250 என்ற எண்களின் மூலம் தொடர்பு கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# கல்வியை டிஜிட்டல் மயமாக்க TikTok நிறுவனம் இணக்கம்

நாட்டில் கல்வியை டிஜிட்டல் மயமாக்குவதற்கு TikTok நிறுவனம் இணக்கம் தெரிவித்துள்ளது.

TikTok நிறுவனத்தின் தெற்காசியாவிற்கான அரச தொடர்பாடல் தலைவர் மற்றும் தெற்காசியாவிற்கான பொதுமக்கள் விவகாரத் தலைவர் அல் மற்றும் பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி ஆகியோருக்கு இடையே நடைபெற்ற கலந்துரையாடலின் போது இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டிஜிட்டல் கல்வி தொடர்பில் தெளிவுபடுத்துவதற்காக விதிமுறைகள், ஆராய்ச்சி மற்றும் பாடத்திட்டங்களில் தேவையான திருத்தங்களை சேர்ப்பதன் முக்கியத்துவத்தை TikTok பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

TikTok

கல்வித்துறையில் முன்னெடுக்கப்படும் சீர்திருத்தங்களுடன் இவ்வாறான ஒத்துழைப்புகளை பாராட்டிய பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி, டிஜிட்டல் மயமாக்கல் செயன்முறையை விரைவாக செயற்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.


## யாழ்ப்பாணம் மாநகரசபை

### நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவகால தற்காலிக கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான

## மீள் கேள்வி அறிவித்தல் -2025

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ கால தற்காலிக கடைகள் அமைப்பதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகளுக்கான விண்ணப்பப் படிவங்களுக்கான கட்டணத்தையும் வைப்பையும் மாநகர சபையின் முன்னரங்க பகுதியில் செலுத்தி விண்ணப்பப் படிவங்களை மாநகர சபையின் நானாவித இறைவரிப்பகுதியில் பெற்றுக்கொள்ள முடியும்.

- கேள்விப்படிவக்கட்டணம் :- **ரூபா 1,000.00 + Vat 18%**
- கேள்விப்படிவம் விநியோகிக்கும் திகதி :- **18.07.2025 தொடக்கம் 26.07.2025 வரை (ஞாயிற்றுக் கிழமை தவிர்ந்த நாட்களில் மு.ப 9.00 - பி.ப 2.30 மணி வரை)**
- கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல் :- **28.07.2025 முற்பகல் 10.00 மணி வரை**
- கேள்விப்படிவம் திறத்தல் :- **28.07.2025 முற்பகல் 10.00 மணிக்கு**
- கேள்விப்படிவம் திறக்கும் இடம் :- **மாநகர சபை திட்டமிடல் மண்டபம்**
- மீளளிக்கக்கூடிய வைப்புப்பணம் :- **ஆரம்ப கேள்வித் தொகையின் 2% அல்லது ரூபா 2,000.00 இத் தொகைகளில் கூடிய தொகை**

- விண்ணப்பப் படிவங்கள் யாவும் ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என முகவரியிட்டு நானாவித இறைவரி பகுதியில் வைக்கப்படும் கேள்விப் பெட்டியினுள் **28.07.2025 முற்பகல் 10.00 மணிக்கு** முன்னர் சேர்க்கப்படல் வேண்டும்.
- கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் கடிதம் மூலம் அனுமதியளிக்கப்பட்ட ஒருவர் சமூகமளித்தல் வேண்டும்.
- கேள்வியில் சித்தி பெற்றவர்கள் தாங்கள் சித்தி பெற்ற சகல கடைகளுக்குமான இடத்திற்குரிய கேள்வித் தொகையினையும் அதற்கான 18% Vat இனையும் **01.08.2025ம் திகதி 2.30** மணிக்கு முன்னர் முன்னரங்கப் பகுதியில் முழுமையாக செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்வதன் மூலம் குறிக்கப்பட்ட கடைகளிற்கான இடத்தினைப் பெற்றுக்கொள்ளலாம். தவறும் சந்தர்ப்பத்தில் தங்களால் விண்ணப்பிக்கப்பட்ட சகல விண்ணப்பங்களும் இரத்துச்செய்யப்படுவதுடன் மீளளிக்ககூடிய வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
- **கேள்விகோரலில் சித்தியடைந்தோர் 01.08.2025ம் திகதி 2.30 மணிக்கு முன்னர் கேள்வித் தொகையினைச் செலுத்தத் தவறிய கடைகளுக்கான மீளளிக்கக்கூடிய வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது.**
- மீளளிக்கக் கூடிய வைப்புப் பணத்தை மீளளிக்க ஏதுவாக வைப்புதாரரின் வங்கி கணக்கு புத்தக பிரதி (பெயர், கணக்கிலக்கம், வங்கி விபரம் உள்ளடங்கிய பக்கம் இணைக்கப்படவேண்டும்.
- 30.11.2025ம் திகதிக்கு முன் உரிய ஆவனங்களை சமர்ப்பித்து மீள பெற்றுக்கொள்ளாத மீளளிக்கக்கூடிய வைப்புப் பணம் சபை வருமானமாக மாற்றப்படும்.
- மேலதிக விபரங்கள் மற்றும் நிபந்தனைகளை மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் பெற்றுக்கொள்வதுடன் வரைபடத்தையும் பார்வையிடலாம்.
- கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

வி.மதிவதனி
மாநகர முதல்வர்,
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அரசமைப்பு மாற்றம் எப்போது?

இலங்கையில் நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமை கடந்த 47 ஆண்டுகளாக நீடிக்கின்றது.

1977 பொது தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன 1978 இல் கொண்டு வந்து நிறைவேற்றிய தற்போதைய அரசமைப்பின் கீழ் இந்த ஜனாதிபதி ஆட்சி முறைமை அறிமுகப் படுத்தப்பட்டு தொடர்ந்து நடைமுறையில் இருக்கின்றது.

இந்த நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை ஒழிப்போம் என்று மக்களுக்கு வாக்குறுதி கொடுத்து, அதன் அடிப்படையில் அதிகாரத்துக்கு வந்த சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க என்று பல ஜனாதிபதிகளையும் அவர்களது அரசுகளையும் இலங்கை மக்கள் கண்டு விட்டார்கள்.

இந்த விடயத்தில் அந்த நிறை வேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்போம் என்று வாக்குறுதி அளித்த எவருமே உண்மையாகவும் நேர்மையாகவும் முழுமூச்சுடனும் அதற்காக உழைக்கவில்லை என்பது தெளிவானது.

இப்போது அதிகாரத்துக்கு வந்திருக்கும் தேசிய மக்கள் சக்தி அரசும் அத்தகைய வாக்குறுதியை தந்திருந்தது. ஆயினும், நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை ஒழித்தல் உட்பட்ட சீர்திருத்தங்களுக்கு வகை செய்யும் அரசமைப்பு உருவாக்க முயற்சியை இந்த அரசு தள்ளிப் போட்டு விட்டது. அதற்கு மாறாக, அந்த நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையின் கீழான நடவடிக்கைகளுக்கு அமைய, அந்த நிறைவேற்று அதிகாரத்தை முழு அளவில் பிரயோகித்து, அதை அனுபவிப்பதிலேயே இந்த ஆட்சிப் பீடம் குறியாக இருப்பதாகத் தெரிகிறது.

நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிப்புத் தொடர்பில் முன்னைய அரசுகளும் ஜனாதிபதிகளும் கொடுத்த வாக்குறுதிக்கும் தேசிய மக்கள் சக்தி கொடுத்த வாக்குறுதிக்கும் இடையில் ஒரு முக்கிய வேறுபாடு உண்டு. முன்னைய தரப்புக்கள் அத்தகைய வாக்குறுதியை கொடுத்த போதிலும், அதனைச் செய்வதற்கான நாடாளுமன்ற வலிமை அந்த ஆட்சி பீடங்களுக்குப் பெரும்பாலும் கிட்டவேயில்லை.

ஆனால் நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமை ஒழிப்பு உட்பட்ட அரசமைப்பு மாற்றங்களைச் செய்வோம் என்று வாக்குறுதி அளித்த தேசிய மக்கள் சக்திக்கு, அதைச் செய்யத் தேவையான நாடாளுமன்ற வலிமையை இலங்கை மக்கள் போதிய அளவு வழங்கியிருக்கிறார்கள். ஆகவே அதனைச் செய்ய வேண்டிய இரட்டிப்புக் கடப்பாடு இந்த அரசுக்கு உண்டு.

ஆனால் அரசு அந்த விடயத்தை தனது ஆட்சி காலத்தின் அந்தத்துக்குத் தள்ளிப் போட்டுவிட்டு, அந்த நிறைவேற்றதிகாரத்தை அனுபவித்துப ருசிப்பதில் காலத்தைச் செலவிடுகின்றது.

எந்த அரசும் அதிகாரத்துக்கு வந்த கையோடு அரசமைப்பை மாற்றினாலேயே ஒழிய, ஆட்சிக் காலத்தின் அந்தத்தில் அதைச் செய்வது என்பது பெரும்பாலும் சாத்தியப்படக்கூடியது அல்ல. இது நன்கு தெரிந்திருந்தும் நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை மாற்றுதல் உட்பட்ட விடயங்கள் அடங்கிய புதிய அரசமைப்பு உருவாக்க விவகாரத்தில் அரசு உறுதியாக இருக்கின்றது, அது தொடர்பில் மக்கள் வழங்கிய ஆணையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்திருக்கிறார்.

‘கணக்குப் புத்தகம் பேசாமல், கணக்குப்பிள்ளை பேசும் விடயம்தான்’ இங்கு நடைபெறுகின்றது.

அரசமைப்பு உருவாக்க முயற்சி முன்னெடுக்கப்படுவதற்கான சாத்தியங்கள் அரசு தரப்பில் இருந்து வெளிப்படுவதாக இல்லை.

ஜனாதிபதி என்ற முறையில் இரண்டு பதவி காலங்கள் நிறைவேற்றதிகார ஜனாதிபதியாக தாம் பதவி வகிக்க முடியும் எனக் கருதும் ஜனாதிபதி அநுர குமாரதிஸநாயக்க,அதன்காரணமாகவோ என்னவோ புதிய அரசமைப்பை மாற்றும் விடயத்தைத் தள்ளிப்போட்டு, அதில் ஈடுபாடு காட்டுவதைத் தவிர்த்து வருகிறார்.

ஆட்சிக் காலத்தின் அந்தத்தில் அரசமைப்பை மாற்றுவது என்பது பெரும்பாலும் அரசியல் ரீதியாக சாத்தியப்படக்கூடிய ஒன்று அல்ல.



புதிய அரசமைப்பு, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கம்:

# மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நாம் நிச்சயம் நிறைவேற்றியே தீருவோம்

## அநுர அரசு திட்டவட்டம்

புதிய அரசமைப்பு, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கம் உள்ளிட்ட விடயங்களில் மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளின் பிரகாரம் உரிய நடவடிக்கை இடம்பெறும் என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலின்போது தேசிய மக்கள் சக்தி வழங்கிய 22 உறுதிமொழிகளில் இதுவரை ஒன்றுதான் நிறைவேற்றப்பட்டுள்ளது என ஆய்வு நிறுவனம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. எனவே, வழங்கிய வாக்குறுதிகளை இந்த அரசு நிறைவேற்றும் என நம்ப முடியுமா?

புதிய அரசமைப்பு மற்றும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கம் பற்றியும் அவதானம் செலுத்தப்படுமா? என்று எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“மக்களுக்குப் பல உறுதிமொழிகளை வழங்கினோம். அவற்றில் சிலவற்றைத் தேர்வு செய்து, அதில் இத்தனைதான் நிறைவேற்றப்பட்டுள்ளது எனக் கூறுவது அநீதியாகும்.

நாம் வழங்கிய மொத்த உறுதிமொழிகளை ஒப்பிட்டு, அவற்றுள் நிறைவேற்றப்பட்டுள்ளவை எவை என்றே பார்க்க வேண்டும். இலக்கம் முக்கியம் அல்ல. எமது பயணம் எதை நோக்கி, எவ்வாறு சென்று கொண்டிருக்கின்றது என்பதே முக்கியம்.

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளின் பிரகாரம் நாம் செயற்பட்டு வருகின்றோம். இது மக்களுக்கும் தெரியும். அதேபோல் உறுதிமொழிகளை மீறிப் பயணிப்போமானால் அதற்கு எதிராக மக்கள் குரல் கொடுப்பார்கள்.

புதிய அரசமைப்புக்குரிய நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. தேர்தல் முறைமை மாற்றம் உட்பட பல மாற்றங்கள் மக்களின் விருப்பத்தின் அடிப்படையில் இடம்பெறும். சர்வஜன வாக்கெடுப்பில் மக்கள் அங்கீகரித்தால் புதிய அரசமைப்பு அமுலுக்கு வரும்.”

– என்றார்.



# இரணைமடுக் குளத்தில் மீன்பிடித்தவர் தவறி வீழ்ந்து பரிதாப மரணம்

மீன்பிடிக்க வலையை வீசியபோது குளத்தில் தவறி வீழ்ந்தவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் கிளிநொச்சி – இரணைமடுக் குளத்தில் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்றது.

இதில், சாந்தபுரத்தைச் சேர்ந்த பி. துரைராசா (வயது 64) என்பவரே உயிரிழந்தவராவார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கெஹெலியவுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல்

முறையற்ற வகையில் சொத்துக் களை ஈட்டிய குற்றச்சாட்டில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக் வெல்ல, அவரது மனைவி, 03 மகள்கள் மற்றும் மருமகனுக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி லங்கா ஜயரத்ன முன்னிலையில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப் பட்டதன் பின்னர் மனுதாரர்கள் தலா 50,000 ரூபா ரொக்கப்பிணை, தலா 10 இலட்சம் ரூபா பெறுமதியான 2 சரீரப்பிணைகளில் விடுவிக்கப்பட்டுள் ளனர்.

பிரதிவாதிகளுக்கு வெளிநாட்டு பய ணத்தடை விதித்து உத்தரவிட்ட நீத வான், அவர்களின் கடவுச்சீட்டை நீதி மன்றத்தில் சமர்ப்பிக்குமாறு உத்தர விட்டுள்ளார்.

பிரதிவாதிகளின் கைவிரல் அடை யாளங்களை பெற்று அறிக்கை பெற்றுக்



கொள்ளுமாறும் நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

நிதி தூய்தாக்கல் தடுப்புச்சட்டத்தின் கீழ் கெஹெலிய ரம்புக்வெல்ல, அவரது மனைவி, 03 மகள்கள் மற்றும் மருமக னுக்கு எதிராக இலஞ்ச ஊழல் விசா ரணை ஆணைக்குழுவினால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் கடந்த ஜுன் 26 ஆம் திகதி குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

43 குற்றச்சாட்டுகளின் கீழ் முன் னாள் அமைச்சர் கெஹெலிய பண்டார திசாநாயக்க ரம்புக்வெல்ல, அவரின் மனைவி குசும் பிரியதர்ஷனி ஏபா வேய்ஹேன, அவரின் மகள்களான சமித்ரி ஜயனிகா ரம்புக்வெல்ல, சந்துலா ரமாலி ரம்புக்வெல்ல, அமாலி நயனிகா ரம்புக்வெல்ல அவரது கணவரான இசுரு புலஸ்தி பண்டார பொல்கஸ் தெனிய ஆகியோருக்கு எதிராக குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2023ஆம் ஆண்டு 9ஆம் இலக்க ஊழல் தடுப்புச்சட்டத்தின் 65(1)ஆம் சரத்திற்கமைய இலஞ்ச ஊழல் விசா ரணை ஆணைக்குழுவின் உத்தரவின் அடிப்படையில் அந்த சட்டத்தின் 18 அ சரத்தின் கீழ் மனுதாரர்களுக்கு எதிராக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

2020 ஒகஸ்ட் 13ஆம் திகதி முதல் 2024 ஜுன் 24ஆம் திகதி வரையான காலப்பகுதியில் வெகுசன ஊடகம் மற்றும் சுகாதார அமைச்சராக கடமை யாற்றிய போது. சட்டவிரோதமாக சொத் துக்களை ஈட்டியதன் மூலம் தண்டனை சட்டக்கோவையின் கீழ் குற்றங்களை இழைத்துள்ளதாக தெரிவித்து குற்றப்பத்திரிகை ஊடாக மனுதாரர்கள் மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப் பட்டுள்ளன.



# கடலுக்கு செல்ல வேண்டாம்; மீனவர்களுக்கு எச்சரிக்கை

நிலவும் தென்மேற்கு பருவப்பெயர்ச் சியின் காரணமாக இன்று முதல் பலத்த மழையுடனான வானிலை நிலவக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவு பகுதிகளில் பலத்த மழைவீழ்ச்சி பதி வாகக்கூடும் என திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் கடற்பிராந்தியங்களில் பலத்த காற்று வீசலாம் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, காலி முதல் மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பிராந்தி யங்களில் காற்றின் வேகம் அதிகரிக் கலாமென திணைக்களம் குறிப்பிட் டுள்ளது.

எதிர்வரும் 24 மணித்தியாலங் களுக்கு குறித்த பிரதேசங்களில் கடலுக்கு செல்ல வேண்டாம் என மீனவர்கள் மற்றும் கடல்சார் ஊழியர் களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.




# கண்டி எசல பெரஹெறாவை முன்னிட்டு பாடசாலைகளுக்கு விசேட விடுமுறை

கண்டி எசல பெரஹெறாவை முன்னிட்டு அப்பகுதியிலுள்ள 29 பாடசாலைகள் இரண்டாம் தவணை விடுமுறைக்காக ஜுலை 29 முதல் ஓகஸ்ட் 4 வரை மூடப்படவுள்ளதாக கண்டி வலய கல்வி அலுவலகம் தெரிவித் துள்ளது.

கண்டியில் வருடாந்திர எசல பெரஹெராவின் போது எதிர்பார்க்கப்படும் கடுமையான போக்குவரத்து நெரிசல் மற்றும் போக்குவரத்து சவால்கள் காரணமாக இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கையின் மிக முக்கியமான கலாசார மற்றும் மத விழாக்களில் ஒன்றான எசல பெரஹெரா ஜுலை 30 முதல் ஓகஸ்ட் 9 வரை நடைபெறவுள்ளது.

இதன்படி, ஜுலை 29 முதல் ஓகஸ்ட் 7 வரை தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலைகள் பாதுகாப்புப் பணியாளர்களுக்கான தங்குமிடமாகப் பயன்படுத்தப்படும் என்றும் வலயக் கல்வி அலுவலகம் வெளியிட்டுள்ள விசேட சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதனால் விடுமுறை வழங்கப்பட்டுள்ள பாடசாலை நாட்களுக்குப் பதிலாக வேறு நாள்களில் பாடசாலையை நடத்துவது தொடர்பான யோசனையை சமர்ப்பிக்குமாறும் பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் ஓகஸ்ட் 5, 6 மற்றும் 7 ஆகிய திகதிகளை உள்ளடக்கியதாக பாடசாலை விடுமுறையை நீடிப்பது அவசியமா என்பதை தெளிவுபடுத்துமாறும் அதிபர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இதேவேளை கண்டி கல்வி வலயத்துக்குட்பட்ட அரச மற்றும் அரச உதவியின் கீழ் இயங்கும் சிங்கள் மற்றும் தமிழ் பாடசாலைகளுக்கு இரண்டாம் தவணை விடுமுறை ஓகஸ்ட் 8 முதல் ஓகஸ்ட் 17 வரையும் முஸ்லிம் பாடசாலைகளுக்கு ஓகஸ்ட் 20 முதல் ஓகஸ்ட் 24 வரை வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# மயிலிட்டி பேச்சியம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் ஆரம்பம்!

மயிலிட்டி திருப்பூர் அருள்மிகு பேச்சியம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 13 நாட்கள் இடம்பெற உள்ளது.

வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு நேற்று வியாழக்கிழமை சாந்தி பூசை வழிபாடுகள் இடம்பெற்ற நிலையில் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு வசந்த மண்டப பூசை இடம்பெற்று காலை 9.30 மணிக்கு சுபமுகூர்த்த வேளையில் கொடியேற்றம் இடம்பெற உள்ளது.

தொடர்ந்து 11 தினங்கள் மகோற்சவம் இடம்பெற்று விசேட திருவிழாக்கள் இரண்டு நாள்களும் சேர்த்து 13 நாள்கள் திருவிழா இடம்பெறவுள்ளது.



அந்தவகையில், மகோற்சவத்தின் 8 ஆம் நாள் வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வேட்டைத் திருவிழாவும், சனிக்கிழமை சப்பை ரத திருவிழாவும், 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 10 ஆம் நாள் திருவிழாவாக தேர்த்திருவிழா இடம்பெற்று 28 ஆம் திகதி திங்கள்கிழமை சமுத்திர தீர்த்தம் இடம்பெற்று அன்றைய தினம் மாலை 6.00 மணிக்கு கொடி இறக்கம் இடம்பெற உள்ளது.

பிராயச்சித்த பூசை வழிபாடுகள் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்று பிற்பகல் பூங்காவனத் திருவிழாவை தொடர்ந்து தெப்பத்திருவிழாவும் இடம்பெற உள்ளன. தொடர்ந்து 30 ஆம் திகதி புதன்கிழமை காலை வைரவர் அபிசேகம் இடம்பெற்று பிற்பகல் வைரவர் பொங்கல் இடம்பெற உள்ளது.

கொடியேற்ற தினத்தை தவிர்த்து ஏனைய மகோற்சவ தினங்களில் தினமும் வசந்தமண்டப பூசை காலை 10.00 மணிக்கும் மாலை 6.30 மணிக்கும் ஆரம்பமாகும். மகோற்சவ காலத்தில் அடியவர்கள் அம்பாளுக்கு பால், தயிர், இளநீர், பூ மாலை போன்ற பொருள்களை கொடுத்து அம்பாளின் திருவருளைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

# ஒருங்கிணைப்புக் குழுவில் நேரத்தை வீணடிக்கும் அரச தரப்பு எம்.பிக்கள்

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் விசனம்

(பிரபாகரன் டிலக்சன்)

ஆளுங்கட்சியில் இருக்கக்கூடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் சில விடயங்களை ஒருங்கிணைப்புக் குழுவில் கதைக்காமல் நேரடியாகவே அரசாங்கத்தோடு கதைத்து தீர்வை பெற்றுக் கொடுக்க முடியும். அதை விடுத்து இந்த சபையில் கதைத்து நேரத்தை வீணடிக்கின்றீர்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

நேற்றைய தினம் இடம்பெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா அரச அதிகாரிகளின் தனிப்பட்ட விடயங்கள் தொடர்பில் பேசினார். மேலும் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிறிய பிரச்சினைகளை பற்றி தொடர்ந்தும் அரச அதிகாரிகளுடன் பேசி முரண்பட்டுக் கொண்டிருந்தனர்.

இந் நிலையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களின் போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரச அதிகாரிகளிடம் கேள்விகளை கேட்க முடியும். ஆனால் கேள்வி கேட்பதோடு அவர்கள் நிறுத்த வேண்டும். கேள்விக்கு உரிய பதில்கள் கிடைக்கவில்லை எனில் நீதிமன்றம் ஊடாகவோ அல்லது வேறு வழிகள் ஊடாகவோ பதில்களை பெற்றுக் கொள்ள முடியும்.

ஆனால் எதுவிதமான ஆதாரமும் இல்லாமல் தனிப்பட்ட நபர்கள் அந்த இடத்தில் இல்லாதபோது கேவலமான வார்த்தைகளைப் பயன்படுத்தி ஏனையவர்கள் கதைப்பதை



ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் என்ற வகையில் அமைச்சர் சந்திரசேகர் கட்டுப்படுத்த வேண்டும்.

ஆளுங்கட்சியில் இருக்கக்கூடிய தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன் ச.ஸ்ரீபவானந்தராஜா, ஜெ.ரஜீவன் ஆகியோர் அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற அடிப்படையில் சில விடயங்களை ஒருங்கிணைப்புக் குழுவில் கதைக்காமல், நேரடியாகவே அரசாங்கத்தோடு கதைத்து தீர்வை பெற்றுக் கொடுக்க முடியும். ஆனால் அதை விடுத்து இந்த சபையில் கதைத்து நேரத்தை வீணடிக்கின்றீர்கள். – என்றார்.

# தனிநபர்கள் படம் காட்டிக் குழப்பம் செய்கின்ற கடைசி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இது!

## நேற்று அமைச்சர் சந்திரசேகர் திட்டவட்டம்



(பிரபாகரன் டிலக்சன்)

ஒருங்கிணைப்பு குழு கூட்டங்களை குழப்பி தனிநபர்கள் படம் காட்டுகின்ற கடைசி ஒருங்கிணைப்பு குழு கூட்டம் இதுவாகவே இருக்கும் என யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவரும் அமைச்சருமான இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் அமைதியின்மை ஏற்பட்டவேளையில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

யாழ் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் அபிவிருத்தி பற்றிய செயற்பாடுகள் குறைந்தளவான நேரமே பேசப்பட்டிருக்கிறது.

நாட்டினுடைய அபிவிருத்தி வேலை திட்டங்கள் அரச அதிகாரிகள் ஊடாகவே மக்களிடம் கொண்டு செல்லப்படுகின்றன. அரச அதிகாரிகளை திட்டமிட்டு அவமரியாதை செய்தால் அது நேரடியாக அபிவிருத்திப் பணிகளையே பாதிக்கும்.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் தனிநபர்கள் படம் காட்டுகின்ற கடைசிக் கூட்டம் இதுவாகவே இருக்கும். குழப்பத்தில் ஈடுபடுபவர்கள் கூட்டங்களுக்கு வராது விட்டாலும் பிரச்சினை இல்லை. இனிவரும் காலங்களில் இவ்வாறான குழப்பம் விளைவிக்கும் செயற்பாடுகளுக்கு இடமிருக்காது. – என்றார்

# யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பங்கேற்பவர்களை கண்ணியமாக நடாத்த வேண்டும்

## யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் சத்தியமூர்த்தி வற்புறுத்தல்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பங்கேற்பவர்களை கண்ணியமாக நடாத்த வேண்டும். இல்லாது விட்டால் பங்குபற்றாது விட வேண்டிய நிலைமை ஏற்படும் என யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் சத்தியமூர்த்தி தெரிவித்தார்

யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் அதன் தலைவரும் அமைச்சருமான சந்திர சேகரன் மற்றும் இணைத்தலைவர் வடக்குமாகாண ஆளுநர் வேதநாயக னின் பங்கேற்புடன் நேற்று வியாழக் கிழமை யாழ் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது நாடாளுமன்ற உறுப் பினர்களுக்கும் அரச அதிகாரிகளுக் கும் உள்ளூராட்சி மன்றங்களின் தவிசா ளர்களுக்கும் இடையே வாய்த்தர்க்கங் கள், கூச்சல்கள், குழப்பங்கள் இடம் பெற்ற நிலையில் போதனா வைத்தி யசாலை பணிப்பாளர் அங்கு கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு குறிப்பிட் டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

யாழ் மாவட்ட அபிவிருத்திக் குழு கூட் டத்தில் பங்கேற்பவர்களை கண்ணிய மாக நடத்த வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்கலாம். அமைச் சர்களாக இருக்கலாம். எங்களை அழைத் தால் கண்ணியமாக நடத்தவேண் டும்.

இங்கு வந்து கத்துவதால், பேசுவ தால் மாரடைப்பு, பக்கவாதம், நித்திரை யின்மை நோயாளிகளாக உருவாக்க வேண்டாம்.

இங்கு வந்தால் எம்மை குழப்பு கின்ற வகையில் இருக்கின்றது. உரத்த சத்தம் போடுவதால் உண்மையான அபி விருத்தி நடக்கபோவதில்லை. நாங்கள் மக்களுக்கு சேவையாற்றி வருகின் றோம்.

ஒழுக்கமாக, பண்புகளுடன் நடத் தப்பட வேண்டும். எங்களை அவமரியா தைப் படுத்தினால் இந்தக் கூட்டத்தில் இருந்து வெளியே போகமுடியும். தொடர் கூட்டத்திற்கு பங்குபற்றாது விடமுடியும்.– என்றார்.

இதேவேளை இதன்போது குறுக் கிட்ட நாடாளுமன்ற அர்ச்சுனா, கணக்கு வழக்குகளைக் கேட்டால் ஏன் பதற்றம் ஆக வேண்டும், கேள்விகள் கோட்டால் பக்கவாதம் மட்டுமல்ல, மாரடைப்பும் வரும். ஆனால் கேட்க வேண்டிய கேள் விகளைக் கேட்போம் என்றார். கேள்வி கேட்க முடியாவிட்டால் இந்த கூட்டத்திற்கு வரவில்லை எனவும் அவர் தெரிவித்தார். அப்போது சபையில் கைகளைத் தட்டி ஆரவாரம் செய்தமையை அவதானிக் கக் கூடியதாக இருந்தது.

இதனை அடுத்து கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திர குமார் பென்னம்பலம், நாடாளுமன்ற உறுப்பினர் கேள்வி கேட்கலாம், ஆனால் அதற்கு பதில் வழங்காதுவிட்டால், அதற்கு அடுத்த கட்ட நடவடிக்கைக்குப் போகலாம், இதனை விடுத்து தனி நபரைப் பற்றிக் கதைப்பத யாருக்கும் அதிகாரம் இல்லை. – என்றார்.

# முல்லைத்தீவு சின்னாற்றில் சடலம் மீட்பு







(பா.சதீசன்)

முல்லைத்தீவு நகர் பகுதியில் உள்ள சின்னாற்றில் இருந்து உயிரிழந்த ஒருவரின் சடலம் நேற்று மீடகப்பட்டுள்ளது.

சின்னாற்றில் மனித சடலம் ஒன்று மிதப்பது பற்றி முல் லைத்தீவுப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்ட தைத் தொடர்ந்து முல்லைத்தீவு பொலிஸார் சம்பவ இடத் திற்கு வந்து சடலத்தை மீட்டுள்ளார்கள்.

இந்தச் சம்பவத்தில் செல்வபுரம் பகுதியைச் சேர்ந்த 54 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள் ளார்.

சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவுப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

# திருக்கோணேஸ்வரர் ஆலயத்தில் இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா



(எஸ்.கீதபொன்கலன்)

இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா நேற்று திருக்கோணேஸ்வரர் ஆலயத்திற்கு வருகை தந்து வழிபாடுகளில் ஈடுபட்டார்.

அவருடன் ஆலய புனருதாரணம் தொடர்பான விடயங்களை முன்னைய இணைந்த வடக்கு – கிழக்கு மாகாணத்தின் பிரதம செயலாளர் கலாநிதி கே.விக்னேஸ்வரன் மற்றும் ஆலய பரிபாலன சபைத் தலைவர் சட்டத்தரணி தி.துஷ்யந்தன் ஆகியோர் கலந்துரையாடினர்.









# வடக்கில் உள்ள தொழிற்கல்வி நிலையங்களில் வெளிமாகாணத்தவர்களே அதிகம் கற்கின்றனர்

## சுட்டிக்காட்டுகின்றார் ஆளுநர் வேதநாயகன்

(பிரபாகரன் டிலக்சன்)

வடக்கிலுள்ள தொழில் கல்வி நிலையங்களில் வெளிமாகாணத்தைச் சேர்ந்தவர்களே அதிகம் கல்வி கற்கின்றனர். எமது மாகாணத்தவர்கள் அவற்றைப் பயன்படுத்துவது மிகக் குறைவாக உள்ளது. இந்த நிலைமை மாற்றியமைக்கப்பட வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

தேசியபயிலுனர்கைத்தொழில்பயிற்சி அதிகார சபையின் கற்கைநெறியைப் பூர்த்திசெய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் நேற்று யாழ் மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

இன்றைய காலத்தில் தொழிற் பயிற்சி மிக முக்கியமானது. அதன் அவசியம் இப்போது எல்லோராலும் உணரப்படுகின்றது. அரச வேலை வாய்ப்பு என்பது மட்டுப்படுத்தப்பட்டஅளவாகமாறிக்கொண்டு வருகின்ற சூழலில், தனியார் வேலை வாய்ப்பையோ அல்லது வெளிநாட்டு வேலை வாய்ப்பையோ பெற்றுக் கொள்ள வேண்டும் என்றால் தொழிற் கல்வி அவசியமானது.

வடக்கு மாகாணத்தில் போரால் அழிவடைந்த தொழிற்சாலைகளை மீள உருவாக்குவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. அந்த தொழிற்சாலைகள் இங்கு மீள இயங்கும்போது தொழிற் பயிற்சி பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்புக்களில் முன்னுரிமை கிடைக்கக் கூடிய சாத்தியம் இருக்கின்றது.

எதிர்காலத்தில் பயிற்சிகளைப் பெற்றுக் கொள்ளாமல் தொழில்களில் ஈடுபட முடியாத நிலைமை உருவாகி வருகின்றது. எனவே, இன்று இங்கு சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளும் நீங்களும், உங்களுக்குத் தெரிந்தவர்களுக்கு இந்தத் தொழிற் கல்வியின் அவசியத்தை எடுத்துக்கூறவேண்டும்.

பாடசாலை இடைவிலகலில் பெண்களை விட ஆண்களே அதிகமாக உள்ள நிலையில், இவ்வாறான தொழிற் பயிற்சிகளைப் பெற்றுக்கொள்பவர்கள் ஆண்களை விட பெண்களே அதிகமாக உள்ளனர். எனவே, கல்வியிலிருந்து இடைவிலகும் ஆண்களை இவ்வாறான தொழிற்முயற்சிகளை நோக்கி ஈர்க்க வேண்டும். – என்றார்.

# தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சிகளைப் பெற்ற 191 மாணவர்களுக்கு யாழில் சான்றிதழ்கள் வழங்கல்







(பிரபாகரன் டிலக்சன்)

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் கற்கை நெறியைப் பூர்த்திசெய்த 191 மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

யாழ் மாவட்ட தேசிய பயிலுநர் கைத்தொழில்பயிற்சி அதிகார சபையில் கற்கை நெறியைப் பூர்த்திசெய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

தேசியபயிலுனர்கைத்தொழில்பயிற்சி அதிகார சபையின் யாழ் மாவட்ட முகாமையாளர் இ.திருமுருகன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன், சிறப்பு விருந்தினராக யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது விவசாயம், மீன்பிடி, கட்டுமானம், மின்னியல், சுற்றுலா, துணைமருத்துவத் துறை போன்ற 28 வகையான துறைகளைச் சேர்ந்த கற்கை நெறிகளைப் பூர்த்திசெய்த 191 மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.





# செம்மணிக்கு சர்வதேச நீதி விசாரணை கோரி மட்டு.மாநகர சபையில் ஏகமனதாகத் தீர்மானம்

(கனகராசா சரவணன்)

செம்மணிப் படுகொலைகளுக்குக் கண்டனம் தெரிவித்தும் அவ்விடயத்துக்கு சர்வதேச நீதி விசாரணையை இலங்கை அரசு மேற்கொள்ள வேண்டும் எனக் கோரியும் மட்டக்களப்பு மாநகரசபை அமர்வில் தமிழரசு கட்சி உறுப்பினர் துரைசிங்கம் மதன் நேற்று வியாழக் கிழமை கொண்டு வந்த பிரேரணை, தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் உட்பட 34 உறுப்பினர்களினதும் ஏக மனதாக ஆதரவுடன் நிறைவேற்றப் பட்டது.

மட்டு. மாநகர சபையின் இரண்டாவது சபை அமர்வு மாநகரசபை முதல்வர் சிவம் பாககியநாதன் தலைமையில் இடம்பெற்றது. இதன் போது தமிழரசு கட்சியின் உறுப்பினர் துரைசிங்கம் மதன் யாழ் செம்மணி புதைகுழி தொடர்பில் இடம்பெற்ற படுகொலைகளுக்கு கண்டனம் தெரிவித்தும் அதற்கு சர்வதேச நீதி விசாரணை வேண்டும் என கோரியும் பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்து உரையாற்றினார்.

இதன்போது அவர் –

சகோதரி கிருஷாந்தி படுகொலையில் ஆரம்பிக்கப்பட்ட இந்த செம்மணி படுகொலைக் கொடூரத்தை தமிழ் மக்களைத் திட்டமிட்டு படுகொலை செய்யும் ஓர் அங்கமாகப் பார்க்கின்றேன். சோமரத்தின ராஜபக்ஷ என்ற சிங்கள இராணுவத்தைச் சேர்ந்தவர் – சர்வதேச மன்னிப்பு சபையின் அழுத்தத்தின் காரணமாக கைது செய்யப்பட்டவர் – அவர் வழங்கிய வாக்கு மூலத்தினால் விடயம் அம்பலமாகிப் புதைகுழி தோண்டப்பட்டது. ஆனால் இடைப்பட்ட காலத்தில் அது நிறுத்தி வைக்கப்பட்டது.

இப்போது மீண்டும் தோண்டப்பட்டு இதுவரை சிறுவர்கள் உட்பட 65 சடலங்களின் என்புகள் மீட்கப்பட்டுள்ளன.

இராணுவத்தைச் சேர்ந்த சோமரத்தின ராஜபக்ஷவின் கூற்றுப்படி, அவரின் உயர் அதிகாரிகளின் பணிப்புக்கு அமைய 400 க்கும் மேற்பட்ட எங்கள் உறவுகள் கொன்று அங்கு புதைக்கப்பட்டுள்ளனர். எனவே இந்தப் படுகொலைகளைப் பற்றி ஆராயப் போனால் மட்டக்களப்பிலே சத்துருக்கொண்டான், மிருசுவில் படுகொலை என ஏகப்பட்ட படுகொலைகள் இடம்பெற்றுள்ளன.

இந்த மிருசுவில் படுகொலையில் சுனில் ரத்நாயனக்கா என்ற இராணுவ வீரர் 8 பேரைக் கொலை செய்து, 9 ஆவது நபரைக் கொலை செய்ய முற்பட்டபோது அவர் தப்பி ஓடி, வெளிக் கொண்டுவந்ததில் விடயம் அம்பலமாகியது. அந்த இராணுவ வீரர் கைது செய்யப்பட்டு சிறைத் தண்டனை அனுபவித்த நிலையில் முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ அவரை பொது மன்னிப்பில் விடுதலை செய்தார்.

எமது இனத்தைத் திட்டமிட்டு அழிக்கும் எவரையும் நாம் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. இந்தத் தமிழ் மக்கள் மீதான படுகொலை தொடர்பில் எதிர்கால இளம் சமூதாயம் அறிந்து கொள்ள வேண்டும்

இதனடிப்படையில் தற்போதைய அநுர அரசு இந்த செம்மணிப் படுகொலை தொடர்பான விசாரணையை முன்னெடுக்க வேண்டும். அதேவேளை இந்த விசாரணை சர்வதேச கண்காணிப்புடன் இடம்பெறவேண்டும். – என்று பிரேரணையை முன்வைத்து உரையாற்றினார்.

இதனை தொடர்ந்து பல உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்து உரையாற்றியதுடன் தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் 11 பேர் உட்பட 34 உறுப்பினர்களும் ஆதரவு தெரிவித்ததையடுத்து பிரேரணை நிறைவேற்றப்பட்டது.













# துணுக்காயில் நாற்பது ஆசிரியர்கள் கடமைகளை பொறுப்பேற்கவில்லை

## மாவட்ட ஒதுக்கீட்டில் வெற்றிடங்களை நிரப்ப ரவிகரன் எம்.பி. வலியுறுத்து

(பா.சதீசன்)

துணுக்காய் கல்வி வலயத்தில் கடமையாற்றிய 44ஆசிரியர்கள் பணியிட மாற்றம்பெற்று வெளிவலயங்களுக்கு சேவையாற்றச் சென்றுள்ளனர். இதன் மூலம் துணுக்காய் கல்விவலயத்தில் ஏற்பட்ட 44ஆசிரியர் வெற்றிடங்களுக்கு வெளிவலயங்களில் பணியற்றிய ஆசிரியர்களுக்கு பணியிடமாற்றம் வழங்கப்பட்டுள்ளபோதும் நான்கு ஆசிரியர்கள் மாத்திரமே இதுவரை கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

இந்நிலையில் இதுவரை கடமைகளைப் பொறுப்பேற்காத ஆசிரியர்களுக்குக்கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென வலியுறுத்திய வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், ஆசிரியர் நியமனங்கள் திறந்த போட்டிப் பரீட்சை முறையில் இடம்பெறுவதால்தான் இத்தகைய சிக்கல் நிலைமைகள் காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டினார்.

எனவே இனி மாவட்ட ஒதுக்கீட்டு முறையில் ஆசிரியர் நியமனங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் ரவிகரன் மேலும் வலியுறுத்தினார்.

முல்லைத்தீவு – துணுக்காய் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்று இடம்பெற்றது. கூட்டத்தில் இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டபோதே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

நிச்சயமாக இந்த சிக்கல்நிலைரைத் தீர்ப்பதற்கு வடமாகாண கல்விஅமைச்சு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

துணுக்காய் கல்வி வலயத்தில் பணியாற்றிய 44பேர் இங்கிருந்து பணியிட மாற்றம் பெற்றுச் சென்றிருக்கின்ற நிலையில், வெளிவலயங்களிலிருந்து 4ஆசிரியர்கள் மாத்திரமே துணுக்காய் வலயத்திற்கு வருகை தந்துள்ளனர். நாற்பது ஆசிரியர்கள் இதுவரை துணுக்காய் வலயத்திற்கு வருகைதந்து தமது கடமைகளைப் பொறுப்பேற்கவில்லை.

இவ்வாறு தமது கடமைகளை இதுவரை பொறுப்பேற்காத ஆசிரியர்களுக்கு எதிராகக் கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

ஆசிரியர் நியமனங்கள் திறந்த போட்டிப்பரீட்சை முறையில் இடம்பெறுவதால்தான் இத்தகைய சிக்கல்நிலைமைகள் காணப்படுகின்றன. மாவட்ட ஒதுக்கீட்டு முறையில் ஆசிரியர் நியமனங்களை மேற்கொண்டால் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும். எனவே இனி மாவட்ட ஒதுக்கீட்டு முறையில் ஆசிரியர் நியமனங்களை மேற்கொள்வதற்கு நாம் தீர்மானங்களை எடுக்கவேண்டும்.

துணுக்காய் வலயத்தில் ஏற்கனவே 160 ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. தற்போது 40ஆசிரியர்கள் கடமைகளைப் பெறுப்பேற்காத நிலையில் துணுக்காய் வலயத்தில் ஆசிரியர்களின் வெற்றிடங்கள் 200ஆக உயர்வடைந்திருக்கின்றது. இதனால் துணுக்காய் வலயத்தினுடைய கற்றல் செயற்பாடுகள் இன்னும் மோசமடைவதற்கான நிலையே ஏற்பட்டிருக்கின்றது.

எமதுபிள்ளைகளும்கல்விகற்கவேண்டும். வன்னி என்றால் ஒதுக்கிவிடுக்கின்ற நிலைமை, முல்லைத்தீவு மாவட்டம் என்றால் ஒதுக்கிவிடுகின்ற நிலைமை, துணுக்காய் என்றால் ஒதுக்கிவிடுகின்ற நிலைமை இருக்கக்கூடாது. அதனை ஏற்றுக கொள்ள முடியாது – என்றார்.

மேலும் இப்பிரச்சினை தொடர்பில் கடந்த 15.07 2025அன்று இடம்பெற்ற மன்னார், முசலிப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் பேசப்பட்டது. இக்கூட்டத்திலும் மன்னார் வலயத்திலிருந்து பல ஆசிரியர்கள் பணியிடமாற்றம் பெற்றுச் சென்றிருக்கின்றனர் எனவும், அந்த வெற்றிடங்களுக்கு வெள வலயங்களிலிருந்து ஆசிரியர்கள் வருகைதந்து தமது கடமைகளை இதுவரைப் பொறுப்பேற்கவில்லை எனவும் மன்னார் வலயக்கல்விப்பணிப்பாளரால் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனினது வலியுறுத்தலுக்கமைய மாவட்ட ஒதுக்கீட்டு முறையில் ஆசிரியர் நியமனங்களை மேற்கொள்ளவேண்டுமென முசலி பிரதேச அபிவிருத்திக்குழுவில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.







# மன்னார் நகர சபையின் அமர்வில் நாவடக்கமின்றி மோதிக்கொண்ட முன்னாள், இந்நாள் முதல்வர்கள்

**(மன்னார் நிருபர்)**

மன்னார் நகர சபையின் ஒத்திவைக்கப்பட்ட அமர்வு மீண்டும் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற போது மன்னார் நகர சபையின் முன்னாள் முதல்வரும், தற்போதைய நகர சபையின் உறுப்பினருமான ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் மற்றும் மன்னார் நகர முதல்வர் டானியல் வசந்தன் ஆகியோருக்கு இடையில் சபை அமர்வின் போது நாவடக்கம் இன்றி வார்த்தைப் பிரயோகங்களும் ஆளையாள் வையும் திட்டுகளும் தாராளமாக இடம்பெற்றன.

மன்னார் நகர சபையின் கன்னி அமர்வு கடந்த 09 ஆம் திகதி இடம் பெற்றது. இதன்போது சபையில் தொடர்ந்தும் உறுப்பினர்களுக்கிடையில் கருத்து முறண்பாடு ஏற்பட்டமையால் சபை முதல்வரினால் அமர்வு ஒத்திவைக்கப்பட்டது.

அந்த அமர்வின் தொடர்ச்சியாக நேற்றைய தினம் வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு சபை முதல்வரினால் மீண்டும் சபை கூட்டப்பட்டது.

அனைத்து உறுப்பினர்களும் பங்கு பற்றி இருந்தனர். இதன் போது மன்னார் நகர சபையின் முன்னாள் முதல்வர், தற்போதைய நகர சபையின் உறுப்பினருமான ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் மற்றும் மன்னார் நகர முதல்வர் டானியல் வசந்தன் ஆகியோருக்கு இடையில் தொடர்ச்சியாக கருத்து முரண்பாடு ஏற்பட்டு, அது வாய்த் தர்க்கமாக மாறியது. இருவரும் நா அடக்கம் இன்றி மாறி மாறி குற்றச்சாட்டுக்களை முன் வைத்து வந்தனர்.

இந்த நிலையில் புதிய செயலாளருக்கு காசோலையில் ஒப்பமிடுதல், மக்களினால் தீர்மானிக்கப்பட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான அனுமதி, ஒப்பந்த அடிப்படை மற்றும் நிரந்தரமாகக் கடமையாற்றுகின்ற ஊழியர்களின் சம்பளம் வழங்குதல் ஆகியவற்றுக்கான அனுமதி கோரப்பட்ட நிலையில் சபையினால் அனுமதி வழங்கப்பட்டு சபை அமர்வு முடிவடைந்தது.











# தமிழினத்தின் மீது இடம்பெற்றது இனப்படுகொலை அதற்கு தாமதமில்லாமல் சர்வதேச நீதி வேண்டும்!

## வலி கிழக்கு பிரதேச சபையில் ஏகமனதாக தீர்மானம்




இலங்கையில் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்டது இனப்படுகொலை. அந்த இனப்படுகொலைக்கு இலங்கை அரசு காரணம் என்ற நிலையில், இலங்கையின் உள்நாட்டு விசாரணைகளில் முற்றிலும் எமது மக்களும் நாமும் நம்பிக்கை இழந்துள்ளோம். இந்த இனப்படுகொலைக்கு சர்வதேச நீதி வேண்டும் என வலிகாமம் கிழக்கு பிரதேச சபை ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் இரண்டாவது அமர்வு தவிசாளர் தியாகராஜா நிரோஷ்தலைமையில்கடந்தசெவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இவ் அம்ர்வில் தவிசாளர் தியாகராஜா நிரோஷினால் இத்தீர்மானம் முன்வைக்கப்பட்ட போது, அரசியல் கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் உறுப்பினர்களின் வரவேற்பினைப் பெற்று தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

தீர்மானத்தை முன்வைத்து தவிசாளர் தியாகராஜா நிரோஷ் உரையாற்றுகையில் –

இலங்கையில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களால் வரலாற்று ரீதியில் நாம் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளோம். எம் மீதான இனப்படுகொலை அரச கொள்கையாக இடம் பெற்றுள்ளது. எமது பூர்வீக தாயகமான வடக்குக் கிழக்கில் நிலங்கள் திட்டமிடப்பட்டு ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. பௌத்த, சிங்களப் பேரினவாத விஸ்தரிப்பு முயற்சியாக எமது மொழி உரிமை மறுக்கப்பட்டது. தமிழ் மக்கள் என்ற காரணத்திற்காக சொந்த மண்ணிலேயே அரச ஒத்துழைப்போடும் அனுசரனையோடும் ஏவுதலோடும் வன்செயல்கள் வாயிலாகவும் இராணுவ நடவடிக்கைகள் வாயிலாகவும் சுதந்திரத்திற்குப் பின் தமிழர்கள் கொன்றழிக்கப்பட்டனர். தமிழர்களைக் கொன்றால் குற்றமில்லை என்ற ஆட்சியாளர்களின் உத்தியோகப் பற்றற்ற ஆதரவு அரசினால் அளிக்கப்பட்டது. தமிழ் மக்கள் மீது முடுக்கிவிடப்பட்ட பாரதூரமான மனித உரிமை மீறல்களுக்கு தண்டனைகளில் இருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. பொறுப்புக் கூறல் இடம்பெறவில்லை.

தமிழ் பெண்கள் அரச படைகளால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டு கொன்று புதைக்கப்பட்டனர். இதற்கு செம்மணி தக்க சான்று. இன்றும் மீட்கப்படும் புதைகுழிகள் மீது சர்வதேச விசாரணை அமையுமாயின் பல உண்மைகளை அவை வெளிப்படுத்தும். தமிழ் இனமாகப் பிறந்தார்கள் என்ற அடிப்படையில் எமது கல்வி உரிமை வரலாற்றில் மறுக்கப்பட்டது. பயங்கரவாதத் தடைச்சட்டம் போன்ற சர்வதேசத்தினால் காட்டுமுராண்டிச் சட்டம் என இனங்காணப்பட்ட சட்டங்கள் வாயிலாக ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் பல தசாப்தங்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இன்றும் அரசியல் கைதிகளாக மீதமுள்ளவர்கள் விடுதலைக்காக ஏங்குகின்றனர். அரச படைகளால் வலோத்காரமாகக் கொண்டு செல்லப்பட்டவர்கள் விடுவிக்கப்படவில்லை. அவர்களது விடுதலையை கோரி வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் தாய்மார் தெருக்களில் வருடக்கணக்கில் போராடிக்கொண்டு இருக்கின்றனர். சிறுவர்கள் பாடசாலை வளாகங்களுக்குள் வைத்தே அரச படைகளால் குண்டுகள் வீசப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவமயமாக்கத்தினுடாக பௌத்த–சிங்களபேரினவாதம்காலத்திற்குக் காலம் தமிழ் மக்களின் பூர்வீக தாயகத்தில் விஸ்தரிக்கப்பட்டு வந்துள்ளது. தமிழ் மக்களுக்குச் சொந்தமான நிலங்கள் எவ்வித சட்ட ரீதியான அணுகுமுறைகளும் இன்றி இராணுவ அதிகாரம் கொண்டு கையகப்படுத்தப்பட்டு வந்துள்ளன. இன்றும் பல நிலங்கள் விடுவிக்கப்படவில்லை. தமிழ் மக்களின் வரலாற்றுத் தாயகம் திட்டமிட்ட அரச தாபனங்கள் ஊடாகக் கபளீகரம் செய்யப்பட்டுள்ளன. நாட்டில் போர்க்காலத்திலும் போருக்குப் பின்னும் பல மனிதப் புதைகுழிகள் அடையாளப்படுத்தப்பட்டு ஏராளமான எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. அவற்றுக்கு உள்நாட்டில் நீதி கிடைக்கவில்லை. இறுதி யுத்தத்திலும் ஏனைய யுத்தத்திலும் போர்த் தர்மங்களையும் உலக நியதிகளையும் மனித உரிமைகளையும் மீறி அரசு செயற்பட்டுள்ளது. வகைதொகையின்றி இலட்சக்கணக்கில் மக்களை படுகொலை செய்துள்ளது.

உள்நாட்டில் உண்மைகளை கண்டறிந்து நீதியை வழங்க போதிய பொறிமுறைகளும் ஏற்புடைமையும் இன்றைய அரசிடமும் கிடையாது. மாறி மாறி ஆட்சிக்கு வந்த எந்த அரசாங்கங்களும் தமிழ் மக்களுக்கு நீதியை வழங்கவில்லை. மாறாக தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை அடக்குவதையும் நீதியை வழங்குவதாக சர்வதேசத்திடம் பொய்யான உத்தரவாதங்களை வழங்கி தமிழருக்கான நீதியை காலந்தாழ்த்தும் உத்திகளிலேயே அரசு கவனம் செலுத்துகின்றது. காலந்தாழ்த்துதல் ஊடாக எமது நீதிக்கேரிக்கை மற்றும் மனிதாபிமானப் பிரச்சினி, இனப்பிரச்சினைத் தீர்வு ஆகியவற்றை நீர்த்துப்போகச் செய்யும் தந்திரோபாயத்தினை இலங்கை கொண்டுள்ளது.

எமது இனம், மொழி, பண்பாடு, கலாச்சாரம், பொருளாதாரம், வரலாறு, அடையாளம் அனைத்தும் திட்டமிடப்பட்டு உள்நாட்டில் அழிக்கப்பட்டுள்ளது. எனவே நாம் எம் மீது இழைக்கப்பட்ட பாரதூரமான மனித உரிமை மீறல்கள் மற்றும் இனப்படுகொலைக்கு சர்வதேச நீதி ஒன்றே தீர்வைப் பெற்றுத்தரும் என்பதை அறுபதாயிரத்திற்கு மேற்பட்ட மக்களின் ஆணைக்குரிய இவ் உயரிய மக்களால் தெரிவு செய்யப்பட்ட உள்ளூர் ஆட்சி மன்றில் தீர்மானமாக எடுக்கின்றோம். – என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

# நடிகர் கமல்ஹாசனை நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார் திருமாவளவன்

மாநிலங்களவை உறுப்பினராக தேர்வாகியுள்ள மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல்ஹாசனை நேரில் சந்தித்து வி.சி.க. தலைவர் திருமாவளவன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

சென்னை, ஆழ்வார்பேட்டையில் உள்ள மக்கள் நீதி மய்யம் கட்சி அலுவலகத்தில் நேற்று இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் திருமாவளவன் கருத்து தெரிவிக்கையில்,

"தமிழுக்காக, தமிழர் நலனுக்காக குரல் கொடுக்கும் பார்வை கொண்டவர் கமல்ஹாசன். தேசிய அளவில் ஜனநாயக சக்தியை ஒருங்கிணைக்க வேண்டும்.

மதச்சார்பின்மையை காக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார். இதனால்தான் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் இணைந்து இயங்குகிறார். அந்த வகையில் தான் நாடாளுமன்றத்தில் அவரது அறிமுக பேச்சு அமையும் என நம்புகிறேன். சகோதரர்களாக இருப்போம் என்ற உணர்வை சந்திப்பின்போது வெளிப்படுத்தினார்.

சென்னையில் ஓகஸ்ட் 16 ஆம் திகதி நடைபெறவுள்ள எனது பிறந்த



நாள் விழாவில் பங்கேற்கவும் அழைப்பு விடுத்தோம். இதற்கு ஒப்புதல் அளித்திருக்கிறார். சட்டப்பேரவைத் தேர்தல் குறித்து பேசவில்லை. தேசிய அளவில் இணைந்து செயலாற்றும் தேவை குறித்து கருத்தியல் ரீதியான கருத்துகளை பரஸ்பரம் பகிர்ந்து கொண்டார்.

எதிர்வரும் தேர்தல் மிகக் கடினமாக இருக்கும் என்பது போன்ற தோற்றம் உருவாக்கப்படுகிறது. தி.மு.க. தலைமையிலான கூட்டணி வலுவாக இருக்கிறது. தி.மு.கவை எதிர்ப்பவர்கள் கூட்டணி வடிவத்தையே இன்னும் பெறவில்லை. சில கட்சிகள் கூட்டணியில் சேராமல், கூட்டணியை உருவாக்கும் முயற்சியிலும் ஈடுபடவில்லை. தி.மு.கவை எதிர்க்கும் சக்திகள் சிதறிக் கிடக்கின்றன. தி.மு.க. தலைமையிலான கூட்டணி முதல்வரின் கூற்றுப்படி ஓரணியில் தமிழ்நாடு என்ற அடிப்படையில் வலுப்பெற்று வருகிறது.

தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் குழப்பத்தை உருவாக்குவதற்காக அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி முயற்சிக்கிறார். கட்சி நெருக்கடிகளை சந்தித்து தான் வளர முடியும். அதிமுக ஆட்சியிலும் எங்களுக்கு நெருக்கடி இருந்தது. அதுபோல ஒவ்வொரு காலகட்டத்திலும் நெருக்கடிகளை சந்தித்து வலுப்பெற்று, அங்கீகாரம் பெற்றிருக்கிறோம். எங்களது நெருக்கடிகளை பொதுவெளியில் சொல்வதால் அவமானப்படுகிறோம் என்பது போன்ற தோற்றத்தை உருவாக்க முயற்சிக்கின்றனர். அது உண்மையல்ல.

கொடுத்த இடங்களில் போட்டியிடுவீர்களா என்பது யூகமான கேள்வி. வி.சி.கவும் சேர்ந்து உருவாக்கிய கூட்டணியை வலுப்பெறச் செய்வதும், வெற்றி பெற வைப்பதும் எங்களின் பொறுப்பு. பேச்சுவார்த்தையில் சுமுகமாக தொகுதி பங்கீடு இருக்கும். இதுவரை நடந்ததை போலவே இந்தத் தேர்தலிலும் இருமுனை போட்டியே இருக்கும். தமிழகத்திலும் தேசிய அளவிலும் மூன்றாவது அணி தாக்கத்தை ஏற்படுத்தியதாக வரலாறு இல்லை. மக்களும் இதே மனநிலையில்தான் உள்ளனர்" என்று அவர் தெரிவித்தார்.

# பா.ஜ.கவின் 'தேர்தல் திருட்டு' கிளையாக இந்திய தேர்தல் ஆணையம் மாறிவிட்டது

## ராகுல் குற்றச்சாட்டு

தேர்தல் ஆணையம் பா.ஜ.கவின் 'தேர்தல் திருட்டு' கிளையாக மாறிவிட்டது என்று காங்கிரஸ் மூத்த தலைவரும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.

பிஹாரில் இந்த ஆண்டு இறுதியில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், தற்போது அங்கு வாக்காளர் பட்டியல் சரிபார்ப்புப் பணிகளை தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வருகிறது. 22 ஆண்டுகளுக்குப் பிறகு நடைபெற்று வரும் இந்த பணியின் மூலம், வாக்காளர் பட்டியலில் உள்ள தகுதியற்ற பெயர்கள் நீக்கப்படும், ஒன்றுக்கும் மேற்பட்ட வாக்காளர் பதிவு இருப்பின் அது சரி செய்யப்படும், தகுதிவாய்ந்த வாக்காளர்களின் பெயர்கள் சேர்க்கப்படும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

அதேநேரத்தில், தேர்தல் நேரத்தில் மேற்கொள்ளப்படும் இந்த வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தை எதிர்த்து எதிர்க்கட்சிகள் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளன.

இந்நிலையில், அஜித் அன்ஜூம் என்ற யூடியூபர் தனது எக்ஸ் பக்கத்தில் காணொலி பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார். மேலும், "பிஹாரில் 'எஸ்.ஐ.ஆர்' பெயரில் மோசடி நடக்கிறது. அதற்கான ஆதாரம் இந்த வீகாணொலியில் உள்ளது. அரசு பணியாளர்களே வாக்காளர் படிவங்களை நிரப்புகிறார்கள், அவர்களே வாக்காளர்கள் சார்பாக கையெழுத்திடுகிறார்கள், அரசு அலுவலகத்திலேயே இத்தகைய முறைகேடுகள் மிகவும் வெளிப்படையாக நடக்கின்றன. இது தொடர்பாக தேர்தல் ஆணையம் பதில் அளிக்குமா? தொடர்புடையவர்களுக்கு எதிராக காவல் நிலை



யத்தில் புகார் அளிக்குமா?" என அஜித் அன்ஜூம் கேள்வி எழுப்பி உள்ளார்.

அவரது எக்ஸ் பதிவை இணைத்து ராகுல் காந்தி வெளியிட்டுள்ள பதிவில்,

"பிஹாரில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் என்ற பெயரில் வாக்குகளைத் திருடியபோது தேர்தல் ஆணையம் கையும் களவுமாகப் பிடிபட்டுள்ளது. தேர்தல் ஆணையம் இன்னும் 'தேர்தல் ஆணையமாக' இருக்கிறதா அல்லது அது முற்றிலும் பா.ஜ.கவின் 'தேர்தல் திருட்டு' கிளையாக மாறிவிட்டதா?" என கேள்வி எழுப்பியுள்ளார்.

# மறைந்தார் இயக்குநர் வேலு பிரபாகரன்



இந்திய திரைப்பட இயக்குநர் வேலு பிரபாகரன் காலமானார்.

'இவர்கள் வித்தியாசமானவர்கள்' படத்தின் மூலம் ஒளிப்பதிவாளராக வேலு பிரபாகரன் திரையுலகில் அறிமுகமானவர். 'நாளைய மனிதன்' படம் மூலம் அவர் இயக்குநராக கால் பதித்தார்.

இதேவேளை 'பதினாறு', 'கேங்ஸ் ஒஃப் மெட்ராஸ்', 'கடாவர்', 'பீட்சா 3', 'ரெய்டு', 'வெப்பன்', 'கஜானா' போன்ற படங்களில் அவர் நடித்துள்ளார்.

கடந்த சில நாள்களாக உடல்நலம் பாதிக்கப்பட்டிருந்த வேலு பிரபாகரன், சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

இந்நிலையில், நேற்று பிற்பகல் சிகிச்சை பலனின்றி அவர் காலமானதாகத் தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன.



# பங்களாதேஷில் ஹசீனா ஆதரவாளர்களுக்கும் படையினருக்கும் இடையே மோதல்: 4 பேர் பலி

பங்களாதேஷில் ஷேக் ஹசீனா ஆதரவாளர்களுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையே இடம் பெற்ற மோதலில் 4 பேர் உயிரிழந்துள்ளனர். 50 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

பங்களாதேஷில் பிரதமராக இருந்த ஷேக் ஹசீனாவுக்கு எதிராக கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் மாணவர்கள் நடத்திய போராட்டம் காரணமாக அவர் தனது பதவியை இழந்து, அங்கிருந்து தப்பி இந்தியாவில் தஞ்சம் அடைந்துள்ளார். போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் அமைப்பு சார்பில், நோபல் பரிசு பெற்ற முகம்மது யூனுஸ் இடைக்கால தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். மாணவர்கள் பலர் அமைச்சர்களாக பொறுப்பேற்றனர்.

பங்களாதேஷில் அரசியலில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்திய இந்த நிகழ்வு ஓராண்டை நிறைவு செய்ய உள்ளதை முன்னிட்டு, மாணவர்களின் அரசியல் கட்சியான தேசிய குடிமக்கள் கட்சி சார்பில் இந்த மாதத்தில் அந்த நாட்டின் பல்வேறு பகுதிகளில் பேரணிகள் நடத்தப்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாக, நேற்று கோபால்கஞ்ச் நகரில் பேரணி நடத்தப்பட்டது.

ஷேக் ஹசீனாவின் மூதாதையர்கள் வாழ்ந்த நகரமான இது, அவாமி லீக் கட்சியின் கோட்டையாகக் கருதப்படுகிறது. இந்நிலையில், நேற்று காலை பலத்த பாதுகாப்புடன் பேரணி தொடங்கியது. அப்போது, அவாமி லீக் கட்சியினர், வன்முறையில் ஈடுபட்டனர். பல்வேறு வாகனங்களுக்குத் தீ வைத்த அவர்கள், பொலிஸார் மீது தாக்குதல்களை நடத்தினர். அப்போது, இரு தரப்புக்கும் இடையே நடந்த மோதலில் 4 பேர் கொல்லப்பட்டனர். 50 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

வன்முறையை அடுத்து, மாணவர் தலைவர்கள் பொலிஸ் நிலையங்களுக்குள் தஞ்சம் புகுந்தனர். பலர், பொலிஸ் பாதுகாப்புடன் அண்டை மாவட்டங்களுக்கு விரைந்தனர்.

கோபால் கஞ்ச் மாவட்டத்தில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதை அடுத்து தற்போது அங்கு கடைகள் அடைக்கப்பட்டு வீதிகள் வெறிச்சோடி காணப்படுகின்றன. பொதுமக்கள் நடமாட்டம் இல்லாததால் இயல்பு வாழ்க்கை முடங்கி உள்ளது.

இதனிடையே, வன்முறையில் ஈடுபட்டவர்கள் மீது 24 மணி நேரத்துக்குள் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என மாணவர் தலைவர் நஷீத் இஸ்லாம் வலியுறுத்தியுள்ளார். மேலும், அண்டை மாவட்டமான பரித்பூரில் அடுத்த பேரணி நடத்தப்படும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

முகம்மது யூனுஸ் பதவியேற்றதில் இருந்து பங்களாதேஷில் தொடர் வன்முறைச் சம்பவங்கள் அரங்கேறி வருகின்றன. பங்களாதேஷில் உள்ள சிறுபான்மை இந்துக்களுக்கு எதிராக நடந்த வன்முறைச் சம்பவங்களால், அந்நாடு சர்வதேச அளவில் கடும் விமர்சனங்களைச் சந்தித்தது. சட்டம் ஒழுங்கு நிலைமை மோசமடைந்து வரும் நிலையில், அதைக் கட்டுப்படுத்த யூனுஸ் அரசு தவறுவதாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. நாட்டில் நல்லிணக்கம் குறைந்து வருவதாகவும், மக்களிடையே பிளவு அதிகரித்து வருவதாகவும் கூறும் யூனுஸ் எதிர்ப்பாளர்கள், நிலைமை மேம்படவில்லை என்றால் ஜனநாயகம் ஆபத்துக்குள்ளாகும் என எச்சரித்துள்ளனர்.



# ஈராக்கில் பல்பொருள் அங்காடியில் ஏற்பட்ட தீ விபத்தில் 50 பேர் பலி

ஈராக்கின் கிழக்கு பகுதியில் உள்ள அல் - குட் நகரின் பல்பொருள் அங்காடி ஒன்றில் ஏற்பட்ட தீவிபத்தில் 50 பேர் கொல்லப்பட்டனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்தில் பலர் தீக்காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என அந்த நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தீயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் தீயணைப்பு படையினர் நேற்றிரவு முழுவதும் ஈடுபட்டதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

தீப்பரவலுக்கான காரணம் இதுவரையில் தெரியவராத நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்தநிலையில், சம்பவத்தை அடுத்து கிழக்கு ஈராக்கின் வசிட் பிராந்தியத்தில் மூன்று நாள்களுக்கு துக்கதினம் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, மேற்படி பல்பொருள் அங்காடியின் ஐந்து கட்டடங்களில் தீப்பற்றி எரிவது போன்ற காணொலிகள் சமூக வலைத்தளங்களில் பரவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ராசி பலன்கள் -18.07.2025

## மேஷம்

இன்று முன்னேற்றகரமான பலன்கள் இருக்காது. உங்கள் மனக் குழப்பமும் வளர்ச்சியில் தடையை ஏற்படுத்தும். இது உங்களுக்கு பாதகமாக இருக்கும்.

பணியிடத்தில் திருப்திகரமான பலன்கள் காணப்படாது. அதிக வேலை காரணமாக உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பதை கடினமாக உணர்வீர்கள். பணிகளை மேற்கொள்ளும்போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபட நேரலாம். எனவே இன்று மகிழ்ச்சியுடன் இருக்க நட்பான உறவை பகிர்ந்து கொள்வது நல்லது.

இன்று பணபுழக்கம் குறைவாக காணப்படும். உங்கள் பொறுப்புகள் அதிகமாக இருக்கும். பணப்பற்றாக்குறை காரணமாக உங்கள் உடனடி தேவைகளை பூர்த்தி செய்ய இயலாது.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. அஜீரணக் கோளாறு ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.

## ரிஷபம்

இன்ற உங்கள்ஆற்றலையும் வலிமையையும்உணரும்நாள்.இன்று உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

கடினமான பணிகளைக் கூட இன்று நீங்கள் எளிதாகச் செய்வீர்கள். நீங்கள் பணிகளை திறம்பட கையாண்டு உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டை பெறுவீர்கள்.

இன்று இருவரும் மனம் பொருந்தி ஒற்றுமையுடன் கானாப்படுவீர்கள். உங்கள் காதலின் எதிர்காலத்தை பற்றி கலந்தாலோசிபீர்கள்.

இன்று பண வரவு காணப்படுகின்றது. நீங்கள் எதிர்பாராத வகையிலிருந்து பணம் கிடைக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும். தியானம் அல்லது யோகா மேற்கொள்வது உங்களுக்கு நல்லது.

## மிதுனம்

பிரச்சினை அல்லது மனக் குழப்பம் காரணமாக இன்றைய நாளை அனுபவிக்கும் மனநிலை உங்களிடம் இருக்காது. நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும்.

நீங்கள் உங்கள் பணிகளை திறம்பட மேற்கொள்வீர்கள். உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்காத காரணத்தினால் நீங்கள் ஏமாற்றமடைவீர்கள்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுவதன் மூலம் நல்லுறவை வளர்ப்பீர்கள்.

இன்று கணிசமான தொகை சம்பாதித்தாலும் தவிர்க்க முடியாத செலவுகள் காரணமாக நீங்கள் பணத்தை தக்க வைத்துக்கொள்ள இயலாது.

பெரிய அளவிலான ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் இருக்காது. ஆனால் நீங்கள் அசௌகரியமாக உணர்வீர்கள்.

## கடகம்

உங்கள் மனதிலிருந்து எதிர்மறை எண்ணங்களை நீக்காவிடில் உங்கள் வளர்ச்சிபாதிக்கும். மதிப்புமிக்கபொருளை இழக்க வாய்ப்புள்ளதால் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் சக பணியாளர்களுடன் கருத்து வேறுபாடு காணப்படும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உங்கள் துணையிடம் உங்களுக்கு அசௌகரியமான உணர்வு காணப்படும். இதை அவருக்கு தெளிவாக உரைப்பது சிறந்தது.

இன்று சில நிதி கட்டுப்பாடுகள் காணப்படும். நிதியில் ஸ்திரத்தன்மை காண நீங்கள் உங்கள் செலவுகளை கண்காணிக்க வேண்டும்.

செரிமானம் மற்றும் கண் சம்பந்தமாக பிரச்சினைகள் இன்று காணப்படும்.

## சிம்மம்

இன்று தடைகளையும் கஷ்டங்களையும் சமாளிக்க வேண்டியிருக்கும். நீங்கள் முயற்சி எடுத்தால் இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக வெற்றியை அளிக்கும்.

இன்று பணிச்சுமை அதிகமாக இருக்கும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள்.

உங்களின் அகந்தைப் போக்கு காரணம்மாக உறவில் நல்லிணக்கம் குறைந்து காணப்படும். உங்கள் துணையின் உணர்வுகளை கருத்தில் கொண்டு மதிப்பது நல்லது.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. கவனம் தேவை.

தேவையற்ற எண்ணங்கள் காரணமாக குழப்பம் மட்டுமன்றி தலைவலியும் ஏற்படும்.

## கன்னி

உங்கள் செயல்களை மேற்கொள்வதில் தடைகள் காணப்படும் ஒரு முடிவை செயலாக்குவதற்கு முன் ஒன்றுக்கு இரண்டு முறை யோசிக்க வேண்டும். தகவல் பரிமாற்றத்தில் குறைபாடு காணப்படும்.

சக பணியாளர்களுடன் சூடான விவாதங்கள் அல்லது அகந்தை உணர்வுகள் தலை தூக்கும். அத்தகைய சூழ்நிலையை நீங்கள் உருவாக்காமல் இருப்பது சிறந்தது.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும்.

நிதி நிலைமை சாதகமாக இருக்காது. தேவையற்ற செலவுகளால் கவலை ஏற்படும்.

கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. கண்களில் கவனம் செலுத்துவது சிறந்தது.

## துலாம்

இன்று இழப்புகள் ஏற்படாத வகையில் கவனமாக நடந்து கொள்ள வேண்டும். பொறுமையாக இருக்க வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

உங்களின் சில பணிகள் முடிக்கப்படாமல் இருக்கும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் திறமையோடு முடிப்பதற்கு திட்டமிடல் அவசியம்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்பட்டு சிறிது வன்மையாக நடந்து கொள்வீர்கள். மகிழ்ச்சியை தக்க வைக்க இத்தகைய நடத்தையை தவிர்க்க வேண்டும்.

அதிக பொறுப்புகள் காரணமாக அதிக செலவுகள் காணப்படும். தேவையற்ற செலவுகளை கண்காணிக்க வேண்டும்.

வயிறு உப்பசம் காரணமாக அவதிப்பட நேரலாம். காரமான மற்றும் எண்ணெய் பதார்த்தங்கள் உண்பதை தவிர்க்கவும். அதிக நீரைப் பருகவும்.

## விருச்சிகம்

இன்று உங்கள் இலக்குகளில் வெற்றி கிடைக்கும் நாள். உங்களின் நேர்மையான முயற்சி மூலம் உங்களிடம் மறைந்திருக்கும் திறமைகளை நீங்கள் உணரும் நாள். இன்று முக்கிய முடிவுகளை நீங்கள் எடுக்கலாம்.

உங்கள் செயல் திறனில் உங்கள் திறமை வெளிப்படும். நீங்கள் தொடர்ந்து கடின முயற்சி செய்து உங்கள் திறமைகளை மேம்படுத்துவீர்கள்.

உங்கள் இருவரிடையே புரிந்துணர்வு குறைந்து காணப்படும். இதனால் உறவில் திருப்தியான நிலை இருக்காது.

இன்று பணபுழக்கம் அதிகமாக காணப்படும். இந்தப் பணத்தை ஆடம்பரப் பொருள்கள் வாங்கப் பயன்படுத்தலாம்.

உங்களிடம் சிறந்த ஆற்றல் காணப்படும். எனவே உங்கள் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் -18.07.2025


தனுசு

இன்று வளர்ச்சி நோக்கி செயலாற்ற உகந்த நாள். உங்கள் இலக்குகளில் வெற்றி அடைய நீங்கள் உங்கள் புத்திசாலித்தனம் மற்றும் திறமையை பயன்படுத்துவீர்கள். இன்று முழுவதும் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

பணி தொடர்பான பயணம் காணப்படுகின்றது. உங்கள் பணிகளை குறித்த நேரத்துக்கு முன்பே முடித்து விடுவீர்கள்.

உங்களின் இனிமையான வார்த்தை களால் உங்கள் துணையை மகிழ்ச்சியுறச் செய்வீர்கள். இருவரும் வெளியிடங்களுக்கு செல்வீர்கள் மற்றும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள்.

தொலை தூரத்திலிருந்து உங்களுக்கு பணம் கிடைக்கும் அது உங்களுக்கு தக்க நேரத்தில் உதவிகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பை உயர்த்துவதற்கு நீங்கள் இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளலாம்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். இதற்கு உங்களின் மகிழ்ச்சியான மனநிலை தான் காரணம்.


கும்பம்

இன்று நீங்கள் ஆன்மீகத்தில் ஈடுபடும் சூழல் ஏற்படும். இதனால் உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும். சமூக கூட்டங்களில் கலந்து கொள்வீர்கள். புதிய நண்பர்களை உருவாக்கிக் கொள்வீர்கள்.

வெற்றிகரமான பலன்களைக் காண கடினமாக உழைக்க வேண்டும். சில பணிகள் முடிக்க முடியாமல் நிலுவையில் வைக்க வாய்ப்புள்ளது.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்பட்ட உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க அத்தகைய உணர்வுகளை தவிர்க்க வேண்டும்.

இன்று கூடுதல் செலவினங்கள் காணப்படும். கடன் வாங்க நேரலாம்.

மன உளைச்சல் காரணமாக தோள் வலி ஏற்படலாம். தியானப் பயிற்சி மூலம் ஆறுதல் பெறலாம்.


மகரம்

இன்று உங்களுக்கு சாதகமான நாள். நம்பிக்கை நிறைந்து காணப்படும் நாள். கடின உழைப்புக்கு வெற்றி கிடைக்கும் நாள். நீங்கள் எடுக்கும் முடிவுகள் நல்ல பலன்களை அளிக்கும்.

பணியிடத்தில் திருப்தியான சூழல் காணப்படும். கடினமான உழைப்பின் மூலம் நற்பெயரும் அதன் மூலம் நன்மதிப்பும் பெறுவீர்கள்.

உங்கள் குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும். உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பராமரிப்பீர்கள்.

இன்று நிதிநிலையில் அதிர்ஷ்டம் காணப்படும். உங்கள் பணத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள். அதிர்ஷ்டம் காரணமாக நிதிநிலையில் முன்னேற்றம் காணப்படும்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று முழுவதும் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.


மீனம்

இன்று எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் இன்றைய நாள் சிறப்பாக இருக்கும். புதிய மனிதர்களின் தொடர்பும் அதனால் நல்ல பயனும் கிடைக்கும். இதனால் உங்கள் தொடர்பு வட்டம் விரிவடையும். வாழ்க்கை உங்களுக்கு கவர்ச்சிகரமாக இருக்கும்.

கூடுதல் பணிகள் காரணமாக இன்று நீங்கள் பணியில் மும்மரமாக இருப்பீர்கள். பணிகள் அதிகமாக இருக்கும். அவைகளை திறமையாக கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடும் விவாதங்களும் காணப்படும். இரவரும் நட்பு முறையோடு பழகுவீர்கள்.

நிதியைப் பொறுத்தவரை இன்று சுமாரான நாள். பண வரவிற்கும் சேமிப்பிற்கும் அதிர்ஷ்டம் குறைவான நாள். தூக்கமின்மை மற்றும் பதற்றம் காரணமாக தலை வலி காணப்படும்.

